தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, மாசி 8, திருவள்ளுவர் ஆண்டு – 2046

2015 பிப்ரவரி 20, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர்."

சொற்களின் வகை, தொகைகளை அறிந்த நல்லவர்கள் அவையில் நிறைந்திருப்பவர்களின் தன்மையறிந்து அதற்கேற்ப பேச வேண்டும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

31—

புதை வடங்கள்

***37736—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிப்பட்டி தொகுதி, கடமலைமயிலை ஊராட்சி ஒன்றியத்தில் மஞ்சனூத்து முதல் வெள்ளிமலை வரை பூமிக்கடியில் கம்பிவடம் பதித்து மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ஆண்டிப்பட்டி தொகுதி, கடமலைமயிலை ஒன்றியம், மஞ்சனூத்து முதல் சுமார் 30 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வெள்ளிமலை வரையிலான பகுதி அடர்ந்த வனப் பகுதியாகும். அங்குள்ள 1,145 வீடுகளில், சுமார் 688 வீடுகளுக்குத் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை-T.E.D.A. மூலம் சூரிய மின் வசதி செய்து தரப்பட்டுள்ளது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மீதமுள்ள 457 வீடுகளுக்கு சூரிய சக்திமூலம் மின் வசதி செய்து தர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, மஞ்சனூத்து முதல் வெள்ளிமலை வரையிலான வனப் பகுதியில் பூமிக்கடியில் கம்பிவடம் பதித்து மின்சாரம் வழங்கும் திட்டம் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி' (மேசையைத் தட்டும் ஒலி) 'எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி' எனும் தாரக மந்திரத்தோடு பவனிவரும் நாடு போற்றும் மக்கள் தலைவர், மாண்புமிகு மக்களின் முதல்வர், சோதனைகளை சாதனைகளாக மாற்றியமைக்கும் பேரறிஞர், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

2015 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2010-2011 ஆம் ஆண்டுகளில் தமிழகம் இருண்ட மாநிலமாக இருந்தது. கடந்த நான்கு ஆண்டுகளில் மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் சொல்லியிருப்பதைப்போல 3,358 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்து சாதனை படைத்த ஒரே முதல்வர், மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பது எடுத்துக்காட்டாகும். (மேசையைத் தட்டும் ஒலி) மரபுசாரா எரிசக்தியை ஊக்குவிக்க வேண்டுமென்று பாரதப் பிரதமர் அவர்கள் இப்பொழுதுதான் ஒரு கூட்டம் போட்டு நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், மரபுசாரா எரிசக்திக்கு மூலதனம் செய்து, இந்தியாவில் இருக்கிற 29 மாநிலங்களில் தமிழ்நாடு முதன்மை மாநிலம் என்று உருவாக்கித் தந்த ஒரே முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குச் சாதனையாக நமது மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் டெல்லி சென்று விருதினைப் பெற்ற வரலாறு இங்கே இருக்கிறது. ஒரு மின்சாரத் திட்டத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கி மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். மரபுசாரா எரிசக்தித் திட்டத்திற்கும் நிதி ஒதுக்கி மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். இரண்டும் இல்லாமல் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய வல்லமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத்தான் உண்டு.

சுற்றுச்சூழல் பாதுகாப்புக் கருதி குண்டு பல்பு நாட்டில் தடை செய்யப்பட்டிருக்கிறது. C.F.L. கொடுத்து 4 மெகா வாட் மின்சாரத்தை சேமித்த ஒரே முதல்வர், மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மஞ்சளூத்து முதல் வெள்ளிமலை வரை 15 இராமங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே சூரிய ஒளி மின்சாரத்தின்மூலம் கொடுக்கப்பட்ட மின் விளக்குகள் பழுதடைந்திருக்கின்றன. இதையும் தாண்டி அங்கே வெள்ளிமலை எஸ்டேட், வசந்தா எஸ்டேட், கடனா எஸ்டேட், பிருந்தா எஸ்டேட், பாண்டியன் எஸ்டேட் என்று 3,000 ஏக்கர் பரப்பளவுள்ள பட்டா எஸ்டேட்டுகள் இருக்கின்றன. அங்கே ஏலம், கிராம்பு, மிளகு மற்றும் காப்பி போன்ற பயிர்கள் பயிரிடப்படுகின்றன. அந்த இடங்களில் மின்சாரம் இல்லை. இந்தக் கிராமங்கள் வழியாக கேபிள் பதித்து அதன்மூலம் மின்சாரம் வழங்கும்பட்சத்தில் அங்கே விவசாயம் பெருகக்கூடும். அதன்மூலம்

தமிழ்நாடு அரசுக்கு வருவாயும் கிடைக்கும் என்பதை மனதில் கொண்டு, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் என் கோரிக்கையை பரிசீலனை செய்து மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே இந்த செய்தியைச் சொல்லி கம்பிவடம் பதிக்கும் திட்டத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். (குறுக்கீடுகள்)

திரு. டி. செங்குட்டுவன்: *குற்றச்சாட்டு சொல்கிறார். (குறுக்கீடுகள்) இருண்ட மாநிலமாக இருந்தது என்று சொன்னார். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *நான் குற்றச்சாட்டே சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) நான் குற்றச்சாட்டே சொல்லவில்லை. இருண்ட மாநிலம் என்றுதான் சொன்னேன். (குறுக்கீடுகள்) அது உண்மைதானே? (குறுக்கீடுகள்) அது உண்மைதானே?*

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் குற்றச்சாட்டு இல்லாமல் கேள்வி கேளுங்கள். (குறுக்கீடுகள்) குற்றச்சாட்டு இல்லாமல் துணைக் கேள்வி கேளுங்கள். அவ்வளவுதான், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) துணைக் கேள்வியைக் குற்றச்சாட்டு இல்லாமல் கேட்கச் சொல்லியிருக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *குற்றச்சாட்டு இல்லாமல் அவரைப் பேசச் சொல்லி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்)*

திரு. அ. சக்கரபாணி: இருண்ட மாநிலமாக இருந்தது என்பது தவறான தகவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குற்றச்சாட்டு இல்லாமல்தான் அதைச் சொல்லியிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். (குறுக்கீடுகள்) அதனால் அதிலே ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்)*

2015 பிப்ரவரி 20]

என்னவென்று பார்க்க வேண்டும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவர் குற்றச்சாட்டு சொல்லவில்லை என்று சொல்லிவிட்டார். அவ்வளவுதான், பிரச்சினை தீர்ந்துவிட்டது. (குறுக்கீடுகள்) நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை என்று அவரே சொல்கிறார் அல்லவா? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள், கடந்த ஆட்சியிலே தமிழகம் இருண்ட மாநிலமாக இருந்தது என்று சொன்னார். அதுவும் அவைக் குறிப்பிலே இடம் பெற்றிருக்கிறது. தி.மு.க. கொறடா, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் 'இருண்ட மாநிலமாக இருக்கவில்லை' என்று சொன்னதையும் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு உறுப்பினர்களும் பேசியது அவைக் குறிப்பில் இருக்கின்றன; அவ்வளவுதான். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: இரண்டு பேரும் பேசியது அவைக் குறிப்பில் இருக்கும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) இருவருடைய கருத்துகளும் பதிவு செய்யப்பட்டுவிட்டன. (குறுக்கீடுகள்) நீங்கள் சொன்னதையும் பதிவு செய்யச் சொல்லியாகிவிட்டது; அதிலொன்றும் பிரச்சினையில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அதற்கு நீங்கள் பதில் சொல்லிவிட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள், 2010-2011-லே தமிழகம் இருண்ட மாநிலமாக இருந்தது என்று சொன்னார். அது தவறான தகவல். தமிழகத்திலே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதான்; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் அமைதியாக இருங்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள், ஆண்டிப்பட்டி தொகுதியிலே, கடமலைமயிலை ஊராட்சி ஒன்றியத்தில், அடர்ந்த வனப் பகுதியில் 10 சிறிய கிராமங்கள் உள்ளன. அரசரடி, இந்திரா நகர், நச்சுஓடை, கீழபொம்மராஜபுரம், மேலபொம்மராஜபுரம், இராஜீவ் நகர், புலித்தாடு, சந்தனக்காப்பு, வெள்ளிமலை, அஞ்சரப்பள்ளி ஆகிய கிராமங்களில் 1,145 வீடுகள் உள்ளன. இந்தப் பகுதிகளிலே உள்ள வீடுகளுக்கு Tamil Nadu Energy Development Agency - தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் மூலமாக 688 வீடுகளுக்கு ஏற்கெனவே மின் வசதி செய்யப்பட்டுள்ளது. மீதியிருக்கின்ற 457 வீடுகளுக்கு இப்பொழுது தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை (T.E.D.A.) மூலமாக சூரிய ஒளி சக்தியைப் பயன்படுத்தி மின் வசதி செய்து தர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதியிலே புதைவடம் மூலமாக மின் இணைப்பு ஏற்படுத்தி மின்சாரம் வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அவருடைய கோரிக்கை நியாயமானதுதான்.

அதேசமயத்தில், அந்தப் பகுதி ஏறத்தாழ 30 கிலோ மீட்டர் தூரம் அடர்ந்த வனப் பகுதியாக இருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதியில் மின்சார வழித்தடம் அமைப்பதற்கு, வனத் துறையினுடைய அனுமதியைப் பெற்றாக வேண்டும். வனப் பகுதியிலே இந்த மின்சார வழித்தடத்தை அமைப்பதற்காக வனத் துறையிடம் அனுமதி கேட்டு விண்ணப்பிக்கப்பட்டிருக்கிறது. வனத் துறையிலிருந்து இன்னும் அனுமதி கிடைக்கப்பெறவில்லை. ஆகவே, வனத் துறையிடமிருந்து அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், underground cable பதிப்பதற்குப் பதிலாக, மின்சார வழித்தடத்தை overhead line மூலமாக, மேலே மின் கம்பிகளைக் கொண்டு வந்து, அங்கே மின் இணைப்புக் கொடுப்பதற்காக இப்பொழுது திட்டம் திட்டப்பட்டு, அதற்கான மதிப்பீடுகள் நம்முடைய தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாகத் தயாரிக்கப்பட்டு, தயார் நிலையிலே இருக்கின்றன. அதற்கு 2.10 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதைப்போல, கடமலைக்குண்டு வழியாக வெள்ளிமலை வரையிலான வனப் பகுதியில், பூமிக்கடியில் புதைவடம் பதித்து மின்சாரம் வழங்க வேண்டுமென்று சொன்னால், 2.10 கோடி ரூபாய் என்பதற்குப் பதிலாக, 10 கோடி

ரூபாய் வரை செலவாகும். ஆகவே, 5 மடங்கு கூடுதலாகச் செலவாகும் என்பதால், அதையும் கவனத்தில்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை ஆய்வு செய்வோம். ஆனால், வனத் துறையிலிருந்து அனுமதி கிடைத்ததற்குப் பின்புதான் அங்கு overhead line மூலமாக மின்சாரம் கொடுப்பதா அல்லது பூமிக்கடியில் புதைவடம் பதித்து மின்சார இணைப்பு கொடுப்பதா என்பதை ஆய்வு செய்து, அன்றைக்கு இருக்கும் நிதிநிலைக்கேற்பவும், சூழ்நிலைக்கேற்பவும் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலுடன் நடைபெறும் இந்த அரசு உரிய நடவடிக்கைகளை நிச்சயமாக மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி நேரத்தில் கேள்வியை மட்டும் கேட்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், கேள்வியைக் கேளுங்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையைச் சொன்னேன். குற்றச்சாட்டு எதுவும் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, கேள்வியைக் கேளுங்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல மஞ்சனூத்து பகுதி முதல் வெள்ளிமலை பகுதி வரை பூமிக்கடியில் புதைவடம் பதித்தாலும் சரி, overhead line அமைத்துக் கொடுத்தாலும் சரி, அந்தப் பகுதியில் இருக்கின்ற எஸ்டேட் முதலாளிகள் மின்சார வாரியத்திற்குத் தேவையான உதவிகளைச் செய்வதாகக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, அதைக் கருத்தில் கொண்டு அந்தப் பகுதியில் மின்சார வசதி கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய அந்தப் பகுதிகளில் உள்ள தனியாரும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தத்

தேவையான உதவிகளைச் செய்ய முன்வருவதற்காக அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதிகளில் எந்தவொரு திட்டத்திற்கும் வனத் துறையின் அனுமதி பெற வேண்டும் என்பது ஒன்றுதான் தடையாக இருக்கிறது. வனத் துறையின் அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் நிச்சயமாக அந்தப் பகுதிகளிலே மின்சார இணைப்பு கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறும் இந்த அரசு உறுதியாக எடுக்கும் என்பதை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

32-

வீடுகள் கட்டுதல்

***32433—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, மணவாளக்குறிச்சி பேரூராட்சி, சின்னவிளையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக புதிய வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக புதிய வீடுகள் கட்டும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணவாளக்குறிச்சி, சின்னவிளை, பெரியவிளை பகுதிகள் கடற்கரைப் பகுதிகளாக இருக்கின்றன. ஆயிரக்கணக்கான*